KEMENTERIAN SUMBER MANUSIA

# “KERATAN AKHBAR KESUMA”

## AHAD
## 12 April 2026

| | |
|---|---|
| **Akhbar** | **Makkal Osai** |
| **Tarikh** | **12 April 2026** |
| **Ruang** | **Nation** |
| **Muka Surat** | **5** |

# கெசுமாவின் 100 நாள் தொழிலாளர் சீர்திருத்தம்

## மலாய் வர்த்தக சபை ஆதரவு



கோலாலம்பூர், ஏப்.12- மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ ஆர். ரமணனன் நிர்வாகத்தின் கீழ் முதல் 100 நாட்களில் மனிதவள அமைச்சு (கெசுமா) பெரும் தாக்கமிக்க கொள்கைகளைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்துவது, தொழிலாளர் நலச் சீர்திருத்தங்களை விரைவாகவும் திறம்படவும் செயல்படுத்துவதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நிரூபித்துள்ளது என்று மலேசிய மலாய் வர்த்தகச் சபையின் (டிபிஎம்எம்) தலைவர் நோர்ஷாரின் ஹமிடோன் புகழ்ந்துரைத்தார்.

தமது தரப்பு இந்த அணுகுமுறையை முழுமையாக ஆதரிப்பதாகவும் ஒவ்வொரு முயற்சியும் திறம்பட செயல்படுத்தப்பட்டு மக்களுக்கு நேரடியாகப் பயனளிப்பதை உறுதிசெய்ய கெசுமாவுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுவதாகவும் அவர் சொன்னார்.

சமூகப் பாதுகாப்பு அமைப்பின் (சொக்சோ) கீழ் முன்மொழியப்பட்டுள்ள பயனாளிகளுக்கான திட்டத்திற்கும் டிபிஎம்எம் ஆதரவளிக்கும் என்றும் இத்திட்டம் 400,000-க்கும் மேற்பட்ட மலேசியர்களுக்கு, குறிப்பாக சிங்கப்பூருக்குப் பயணம் செய்யும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தினசரி அபாயங்களுக்கு உள்ளாகும் எல்லை தாண்டிய தொழிலாளர்களைப் பாதுகாப்பதில் இந்தத் திட்டம் மிகவும் முக்கியமானது.

எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா, சவூதி அரேபியா, எகிப்து, துபாய் போன்ற வெளிநாடுகளில் பணிபுரியும் மலேசியர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றும் டிபிஎம்எம் பரிந்துரைத்துள்ளது என்று இங்கு வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவர் தெரிவித்தார்.

முன்னதாக மனிதவள அமைச்சுக்குப் பொறுப்பேற்ற 100 நாட்களில் செயல்படுத்தப்படும் ஒவ்வொரு கொள்கையும் குறிப்பாக சமூகப் பாதுகாப்பு, திறன் மேம்பாடு, தொழிலாளர் நலன் ஆகிய அம்சங்களில் மக்கள் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதை உறுதி செய்வதே தமது, அமைச்சின் முக்கிய நோக்கமாக இருந்தது என்று டத்தோஸ்ரீ ரமணன் தெரிவித்தார்.

சொக்சோவின் கீழ் பயணிகளுக்கான திட்டத்தை (Traveller Scheme) அறிமுகப்படுத்துவதற்கான ஒரு முன்மொழிவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கும் இறுதிக்கட்டத்தில் கெசுமா இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக ரமணனுடனான முந்தைய சந்திப்பில் கிக் துறை தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாடு, மறுதிறன் திட்டம், கிக் பொருளாதார தொழில்முனைவோர் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான முன்மொழிவுகளையும் அமைச்சின் பரிசீலனைக்காகச் சமர்ப்பித்ததாக நோர்ஷாரின் கூறினார்.